# ஏப்ரல் - 03 - திங்கள்

புனித ரிச்சார்ட்

**“நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர்” (யோவா 8:11)**

## முதல் வாசகம்: தானியேல்13:1– 9,15– 17,19 – 30

இவளோ எங்களுக்கு மறுமொழி கூற மறுத்துவிட்டாள். இவற்றுக்கு நாங்களே சாட்சி. ”அவர்கள் மக்களுள் மூப்பர்களாகவும் நடுவர்களாகவும் இருந்ததால், மக்கள் கூட்டம் அவர்கள் சொன்னதை நம்பி சூசன்னாவுக்குச் சாவுத் தீர்ப்பிட்டது. அப்பொழுது சூசன்னா உரத்த குரலில் கதறி, ”என்றுமுள இறைவா, மறைவானவற்றை நீர் அறிகிறீர். நிகழுமுன்பே எல்லாம் உமக்குத் தெரியும்.இவர்கள் எனக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லியுள்ளனர் என்பதும் உமக்குத் தெரியும். இவர்கள் என்மீது சாட்டிய குற்றம் எதுவும் நான் செய்தறியேன். ஆயினும், இதோ நான் சாகவேண்டிருக்கிறதே!” என்று சொன்னார்.ஆண்டவர் சூசன்னாவுடைய கூக்குரலுக்குச் செவிசாய்த்தார்.கொல்லப்படுமாறு அவர் நடத்திச் செல்லப்பட்ட பொழுது, தானியேல் என்னும் பெயருடைய இளைஞரிடம் தூய ஆவியைக் கடவுள் தூண்டிவிட்டார். தானியேல் உரத்த குரலில், ”இவருடைய இரத்தப்பழியில் எனக்குப் பங்கில்லை” என்று கத்தினார்.மக்கள் அனைவரும் அவர்பால் திரும்பி, ”நீர் என்ன சொல்கிறீர்?” என்று வினவினர். அவரோ அவர்கள் நடுவே நின்றுகொண்டு பின்வருமாறு சொன்னார் ”இஸ்ரயேல் மக்களே, வழக்கை ஆராயாமலும், உண்மையை அறிந்துகொள்ளாமலும் இஸ்ரயேல் மகள் ஒருத்தியைத் தீர்ப்பிடத் துணிந்து விட்டீர்களே! அந்த அளவுக்கு நீங்கள் அறிவிலிகளா?நீதி வழங்கும் இடத்திற்குத் திரும்பிப் போங்கள் இம்மனிதர்கள் இவருக்கு எதிராகப் பொய்ச் சான்று சொல்லியிருக்கிறார்கள்” என்றார்.எனவே மக்கள் எல்லாரும் விரைவாகத் திரும்பி வந்தார்கள். மற்ற மூப்பர்கள் தானியேலிடம், ”நீர் வந்து, எங்கள் நடுவே அமர்ந்து, எங்களுக்கு விரிவாய் விளக்கிக்காட்டும் ஏனெனில் மூப்பருக்குரிய சிறப்பை கடவுள் உமக்கு அளித்துள்ளார்” என்று வேண்டிக் கொண்டார்கள். அப்பொழுது தானியேல், ”இவர்களைத் தனித்தனியே பிரித்துத் தொலையில் வையுங்கள். நான் இவர்களை வினவுவேன்” என்றார்.எனவே அவர்கள் இருவரையும் தனித்தனியே பிரித்து வைத்தார்கள். அப்பொழுது தானியேல் அவர்களுள் ஒருவரை அழைத்து, ”தீச்செயலில் விளைந்தவனே! நீ முன்பு செய்த பாவங்கள் இப்பொழுது வெளியாகிவிட்டன.”மாசற்றவர்களையும் நீதி மான்களையும் சாவுக்கு உள்ளாக்காதே” என்று ஆண்டவர் சொல்லியிருந்தும் நீ முறைகேடாகத் தீர்ப்புகள் வழங்கி, மாசற்றவர்களைத் தண்டித்து, குற்றவாளிகளை விடுவித்துள்ளாய். இதோ! நீ உண்மையிலேயே சூசன்னாவைப் பார்த்திருந்தால், எந்த மரத்தடியில் அவர்கள் கூடியிருக்கக் கண்டாய், சொல்” என்று கேட்டார். அதற்கு அவர், ”விளாமரத்தடியில்” என்றார்.அதற்குத் தானியேல், ”நீ நன்றாகப் பொய் சொல்கிறாய். அது உன்தலைமேலேயே விழும். ஏனெனில் கடவுளின் தூதர்ஏற்கெனவே இறைவனிடமிருந்து தீர்ப்பைப் பெற்றுவிட்டார். அவர் உன்னை இரண்டாக வெட்டிப் பிளப்பார்” என்றார்.பின் அவரை அனுப்பிவிட்டு மற்றவரைத் தம்மிடம் அழைத்துவருமாறு பணித்தார். அவரை நோக்கி, ”நீ யூதாவுக்கல்ல, கானானுக்குப் பிறந்தவன். அழகு உன்னை மயக்கிவிட்டது காமம் உன்னை நெறிதவறச் செய்துவிட்டது.நீங்கள் இருவரும் இஸ்ரயேல் மகளிரை இவ்வாறே நடத்தி வந்திருக்கிறீர்கள். அவர்களும் அச்சத்தால் உங்களுக்கு இணங்கிவந்திருக்கிறார்கள். ஆனால் யூதாவின் மகளாகிய இவரால் உங்கள் தீச்செயலைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.இதோ! எந்த மரத்தடியில் சேர்ந்திருக்கும்பொழுது நீ இவர்களைப் பிடித்தாய்? சொல்” என்றார். அவரோ, ”கருவாலிமரத்தடியில்” என்றார்.தானியேல் அவரிடம், ”நீயும் நன்றாகப் பொய் சொல்கிறாய். அது உன்தலைமேலேயே விழும். எனெனில் உன்னை இரு கூறாக வெட்டவும், இவ்வாறு உங்கள் இருவரையும் அழித்தொழிக்கவும் கடவுளின் தூதர் வாளுடன் காத்துக்கொண்டிருக்கிறார்” என்றார்.உடனே மக்கள் கூட்டம் முழுவதும் உரத்த குரல் எழுப்பி, தம்மில் நம்பிக்கை வைப்போருக்கு மீட்பு அளிக்கும் கடவுளைப் போற்றியது.அவர்கள் அந்த முதியோர் இருவருக்கும் எதிராக எழுந்தார்கள் ஏனெனில் அவர்கள் பொய்ச் சான்று சொன்னதை அவர்கள் வாய்மொழியாகவே தானியேல் மெய்ப்பித்திருந்தார். அம்முதியோர் பிறருக்குச் செய்யவிருந்த தீங்கை அவர்களுக்கே மக்கள் செய்தார்கள்.மோசே சட்டப்படி அவர்களைக் கொன்றார்கள். இவ்வாறு மாசற்ற சூசன்னா அன்று காப்பாற்றப்பட்டார்.

**பதில்பாடல் :** இருள் சூழ் பள்ளத்தாக்கில் நடக்க நேர்ந்தாலும்
நான் எதற்கும் அஞ்சமாட்டேன்

## நற்செய்தி: யோவான் 8 : 1-11

அக்காலத்தில் இயேசு ஒலிவ மலைக்குச் சென்றார்.பொழுது விடிந்ததும் அவர் மீண்டும் கோவிலுக்கு வந்தார். அப்போது மக்கள் அனைவரும் அவரிடம் வந்தனர். அவரும் அங்கு அமர்ந்து அவர்களுக்குக் கற்பித்தார்.மறைநூல் அறிஞரும் பரிசேயரும் விபசாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணைக் கூட்டிக் கொண்டு வந்து நடுவில் நிறுத்தி,”போதகரே, இப்பெண் விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிப்பட்டவள்.இப்படிப்பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மோசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்திலுள்ள கட்டளை. நீர் என்ன சொல்கிறீர்?” என்று கேட்டனர்.அவர்மேல் குற்றம் சுமத்த ஏதாவது வேண்டும் என்பதற்காக அவர்கள் இவ்வாறு கேட்டுச் சோதித்தார்கள். இயேசு குனிந்து விரலால் தரையில் எழுதிக்கொண்டிருந்தார்.ஆனால் அவர்கள் அவரை விடாமல் கேட்டுக்கொண்டிருந்ததால், அவர் நிமிர்ந்து பார்த்து, ”உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும்” என்று அவர்களிடம் கூறினார்.மீண்டும் குனிந்து தரையில் எழுதிக் கொண்டிருந்தார்.அவர் சொன்னதைக் கேட்டதும் முதியோர் தொடங்கி ஒருவர் பின் ஒருவராக அவர்கள் யாவரும் அங்கிருந்து சென்று விட்டார்கள். இறுதியாக இயேசு மட்டுமே அங்கு இருந்தார். அப்பெண்ணும் அங்கேயே நின்று கொண்டிருந்தார்.இயேசு நிமிர்ந்து பார்த்து, ”அம்மா, அவர்கள் எங்கே? நீர் குற்றவாளி என்று எவரும் தீர்ப்பிடவில்லையா?” என்று கேட்டார்.அவர், ”இல்லை, ஐயா” என்றார். இயேசு அவரிடம் ”நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர்” என்றார்.)

**தியானம்:** அனியாயத் தீர்ப்புகள் பலரின் வாழ்வையே மாற்றக் காரணமாகின்றது. யேசுவைக் கூட அனியாயமாகத்தானே தீர்ப்பிட்டார்கள். அவரிடம் குற்றம் கண்டுகொள்ள முடியாமல்தானே பொய்க் குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டன. பிலாத்து அவர் குற்றமற்றவர் என்று தெரிந்தும், தனது பதவியை தக்க வைத்துக் கொள்ள யேசுவிற்கு அனியாய தீர்ப்பு எழுதவில்லையா? ஆனால் யேசு யாரையும் தீர்ப்பிட வில்லையே. நற்செய்தியில் பார்ப்பது போல் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை அவர் விடுவிக்க வில்லையா?. பெண்கள் யாரும் விபச்சாரத்தை விரும்பி தெரிவு செய்வதில்லையே!. தமது வயிற்றை நிரப்ப அல்லது தம்மை நம்பியிருக்கும் குடும்பத்தை காப்பாற்ற வேறு வழியின்றி அதற்குள் தள்ளப்படுகிறார்கள். அவர்களை தேடிச் செல்லும் ஆண்கள் விபச்சாரர்கள் இல்லையா? அப்படியானால் தண்டனை இருவருக்கும் கொடுக்கப்பட வேண்டுமல்லவா? அங்கும் கூட பாரபட்சம் பார்க்கப் படுகிறது. யேசு தரையில் என்ன எழுதி இருப்பார்?. அங்கிருந்தவர்களின் பெயரை, அவர்களது பாவத்தை எழுதி இருக்கலாம். அவர் எழுதியபோது ஒவ்வொருவருக்கும் தாம் செய்த பாவம் மனக்கண்முன் வந்திருக்கலாம். அதனால்தான் அவர்கள் ஒருவர் பின் ஒருவராக ஓடியிருக்கலாம். இன்று யேசு நமக்கும் எழுதுகிறார். நமது வாழ்வில் நாம் செய்த பாவத்தை சுட்டிக் காட்டுகிறார். அவற்றில் இருந்து விடுபட்டு மன்னிப்பு பெற நாம் தயாரா?